[திரு. வி. செந்தில்பாலாஜி] [2013 ஏப்ரல் 1

ஏப்ரல் திங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரொக்க இலாபத்தில் இயங்கும் என்பதை உறுதியுடனும், மகிழ்ச்சியுடனும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.P.S. என்னும் புவி இருப்பிட முறைமை வசதிகொண்ட கையடக்க இயந்திரங்களைப் பயன்படுத்தி, மின்னணு பயணச் சீட்டு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் திடமாக, தீர்க்கமாக, மக்களுக்குப் பயனுள்ள, முறையாக நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளி இது என்பதை மீண்டும் ஆணித்தரமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில், உண்மைக்கு மாறான செய்தியை வெளியிட்ட Times of India பத்திரிகைமீதும், அதன் வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர்மீதும், செய்தியை எழுதிய செய்தியாளர்மீதும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, போக்குவரத்துத் துறையின் சார்பில் வழக்குத் தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2013–2014, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year 2013–2014."